**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், உத்திரமேரூர்.**

***முன்னிலை,** திரு.வ.பிரேம்குமார்.,* B.A.B.L.,

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர்

உத்திரமேரூர்.

2022 ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 20 ம் நாள் வியாழக்கிழமை

**IA. No. 3 /2020 in**

**OS. No. 24 /2020**

சீனிவாசன்

**....மனுதாரர்**

**//எதிர்//**

1. வட்டார வளர்ச்சி அலுவலர் அவர்கள், உத்திரமேரூர்
2. உதவி பொறியாளர் அவர்கள்,
   தமிழ்நாடு மின்சார வாரியம்
3. மாவட்ட ஆட்சியர் அவர்கள்,
   காஞ்சிபுரம் மாவட்டம்.

**...எதிர்மனுதாரரகள்**

இம்மனு 22.12.2020 ம் தேதி கோப்புக்கு எடுக்கப்பட்டு 29.09.2022 ம் தேதி என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரா் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.G.மணிகண்டன் அவா்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரா் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் H.ராஜலட்சுமி அவா்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டு, ஆவணங்களை பரிசீலனை செய்து இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்

**உத்தரவு**

1. மனுதாரா் தரப்பில் இம்மனு கட்டளை 39 விதிகள் 1 மற்றும் 2 மற்றும் பிரிவு 151 உரிமையியல் விசாரணை முறைச்சட்டப்படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யபட்டுள்ள மனுவின் சுருக்கம்</u>**

**2.** நாங்கள் பிரதிவாதிகள் மீது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டும் பிரதிவாதிகள் எவ்விதத்திலும் தடை ஏற்படுத்த கூடாது என்பதற்காகவும் பரிகாரம் கேட்டும் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளோம். மனுதாரர் தன்னுடைய மனுவில் தாவா சொத்தானது தன்னுடைய பாட்டனார் எல்லுசாமிபிள்ளை 1960 ஆம் வருடம் கிரையம் பெற்றதாகவும், அதன்பின்பு முனுசாமிப்பிளை மற்றும் அவரது வாரிசுகள் 1972 ஆம் ஆண்டு பாகப்பிரிவினை செய்துக்கோண்டு தாவா சொத்தானது மனுதாரரின் தந்தைக்கு "B" அட்டவணை சொத்தாக ஒதுக்கப்பட்டதாகவும், அதனடிப்படையில் வருவாய்துறையினரால் பட்டா மாற்றம் செய்யப்பட்டதாகவும், 2017 ஆம் ஆண்டு மனுதாரரும் அவரது குடும்ப உறுப்பினர்களும் பாகப்பிரிவினை செய்துக்கொண்டு தாவா சொத்தானது மனுதாரருக்கு ஒதுக்கப்பட்டதாகவும், மேற்படி ஆவணங்கள் அனைத்தும் பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் என்றும், இவ்வழக்கில் முதல் எதிர்மனுதாரர் மனுதாரரிடம் தற்காலிகமாக போர் போட்டு குடிநீர் தொட்டி அமைக்க அனுமதி கேட்டதாகவும், அப்பொழுது மனுதாரருக்கு தாவா சொத்தானது தேவைப்படும்பட்சத்தில் இரண்டு வருடத்தில் காலி அமைத்து மின் இணைப்பும் பெற்றுள்ளார் என்றும் தற்பொழுது மனுதாரருக்கு எதிர்மனுதாரரிடம் சென்று குடிநீர் தேக்க தொட்டியை எடுக்குமாறு கேட்டுக்கொண்டார் என்றும் அதற்கு முதல் எதிர்மனுதாரர் ஒப்புக்கொண்டு எடுக்காமல் இருந்து வருகிறார் என்றும் "A" அட்டவணை சொத்தின் ஒரு பகுதிதான் "B" அட்டவணை சொத்து என்றும் விளம்புகை பரிகாரமும்,

சொத்து மீட்பு பரிகாரமும் கேட்டு இவ்வழக்கு மற்றும் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே பிரதிவாதிகளுக்கு எதிராக இடைக்கால உறுத்து கட்டளைக்கான உத்தரவு பிறப்பிக்கும்படி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இல்லையேல், எங்களுக்கு நிவர்த்திக்க முடியாத அளவிற்கு கஷ்டமும் நஷ்டமும் ஏற்படும்.

**<u>எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யபட்டுள்ள மனுவின் சுருக்கம்</u>**

3. எதிர்மனுதாரர் பணிந்து சமர்ப்பிப்பது தாவா சொத்தானது கிராம நத்தம் புறம்போக்கு என்றும் தாவா சொத்தைப்பொறுத்து மனுதாரரிடம் எவ்விதமான முன் அனுமதியும் பெற வேண்டிய அவசியம் இல்லை. மேலும் மனுதாரரின் பாட்டனார் 1960ல் வாங்கப்பட்ட சொத்தில் அளவுகள் குறிப்பிட்டு வாங்கப்படவில்லை. முதல் எதிர்மனுதாரர் பணிவுடன் சமர்பிப்பது யாதெனில், தாவா "B" அட்டவணை சொத்தானது பொதுமக்கள் பயன்பாட்டில்தான் இன்றைய தேதி வரை கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக இருந்து வருகிறது. வருவாய் கோட்டாட்சியர் அவர்களிடம் நத்தம் நிலவரி திட்டத்தின் கீழ் செய்யப்பட்டு அதனடிப்படையில் உத்திரமேரூர் வட்டாட்சியர் மற்றும் வருவாய் ஆய்வாளர், கிராம நிர்வாக அலுவலர் மற்றும் மருதம் கிராம பொது மக்கள் இவ்வழக்கின் மனுதாரரான சீனுவாசப்பிள்ளை ஆகியோரிடம் உரிய விசாரணை செய்து வருவாய் கோட்டாட்சியரால் 12.01.2021 அன்று "B" அட்டவணை சொத்தை பொறுத்து முதல் எதிர்மனுதாரர் மீது பட்டா திருத்தம் செய்திட வேண்டுமென உத்திரவிடப்பட்டது. எனவே "B" அட்டவணை சொத்து பொறுத்து சொத்து

மீட்பு பரிகாரம் கேட்பது தவறான செயலாகும். எனவே மனுதாரர் கூறுவதில் எவ்வித உண்மையும் இல்லை. ஆகையால் மேற்படி மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டுமென பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

## 5. தீர்வு

மனுதாரர் தாவா "A" அட்டவணை சொத்தைப் பொறுத்து விளம்புகை பரிகாரமும், தாவா "B" அட்டவணை சொத்தைப் பொறுத்து சொத்து மீட்பு பரிகாரமும் கேட்டு வழக்கு தாக்கல் செய்த பின்பு அதில் தடை உத்தரவு பரிகாரம் கேட்பது முறையல்ல. தாவா சொத்துக்களை பொறுத்து மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களுக்கும், "B" அட்டவணை சொத்திற்கும் சம்மந்தம் இல்லாத நிலையில் மனுதாரர் தடை உத்தரவு பரிகாரம் மற்றும் விளம்புகை பரிகாரம் கேட்க முகாந்திரம் இல்லை. பொது மக்கள் பயன்படுத்தி வரும் குடிநீர் தேக்க தொட்டி இடத்தை மனுதாரர் தன் நலத்திற்காக மட்டும் உபயோகிக்க நினைப்பது சுயநலமானது. எனவே, பொதுமக்களின் தேவையை கருத்தில் கொண்டு அரசு ஏற்படுத்தியுள்ள குடிநீர் தேக்க தொட்டியை அகற்ற கூடாது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

## 10. இறுதியாக –

மனு தள்ளுபடி செய்யப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம்

செய்யப்பட்டு இன்று 20.10.2022 ம் தேதியில் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், உத்திரமேரூர்.